முருகப்பெருமான் துணை

**மகான் ஜெயமுனிவர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

13.09.2021, திங்கட்கிழமை

1. ஆறுமுகனார் அதி சூட்சும வடிவான
அண்ணலே ஞான தேசிகனே
மாறுதலை செய்ய வந்தநல்
மாதவசியே உன் பெருமை கூறி
2. கூறியே துல்லிய ஆசிதனை
குறைவிலா பிலவ யாளி திங்கள்
இருபாணெண் திகதி சோம வாரம்
(பிலவ வருடம் ஆவணி மாதம் 28ம் நாள், 13.09.2021, திங்கட்கிழமை)
இயம்பிடுவேன் ஜெயமுனிவர் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உண்மை நெறி காட்டி உலகினில்
ஞானம் வளர்க்கும் அரங்கன்
நன்மைதரும் சன்மார்க்க வழிகள்தனை
4. வழிகள்தனை உலக மக்களும்
வணங்கி ஏற்று வருதலுற
தெளிவு திடம் ஞான பலம் கூடி
தேசிகனார் ஆசி ஏற்க உயருவர்
5. உயர்வுதரும் ஆறுமுகன் அவதார
உண்மை ஞானி உபதேசங்களை
தயவின் சக்தியாக வேதமாக ஏற்று
தரணியோர் வணங்கி வருகவே
6. வருகவே வளர்ச்சியும் மாற்றமும்
வறுமை வெல்லும் ஆக்கமும்
தரும பலமும் தனித்துவமும் கூடி
தரணியோர் ஞானவான்களாவர்
7. ஆவரே உலகை மாற்றவல்ல
ஆறுமுகனார் சக்தி கொண்டோராக
புவனம் ஞான உலகம் ஆகும்படி
புண்ணியம் வளர்க்கும் காக்கும் சக்திகளாகி
8. ஆகியே உலகம் எங்கிலும்
ஆறுமுகனார் வழிபாட்டின் பலம்
மகிழவே உலகமக்கள் அறிய
மகா சேவையாகச் செய்து

9. செய்துமே ஓம் சரவண ஜோதியே நமோநம
செபதபம் உலகெங்கிலும் முழங்க
மெய்ஞானச் சுடரேற்றி வழிபட
மேலான வழிகளை செய்துவர

10. வருகவே இந்தப் பேருலகமே
வடிவேலனார் அருளாசிக்கு வந்து
முருகப் பெருமான் ஆளுமைக்கான
முழுமைபெற்ற ஞான பூமியாகும்

11. ஆகவே அற்புதம் படைக்க
அவதரித்த அரங்கமகானின்
யுகமாற்ற பிரணவத் குடிலுக்கு வர
உலகமாற்ற நிகழ்வு கண்டு சிறப்பர்

துல்லிய ஆசி முற்றே

–சுபம்–